Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 12-2-1985 செவ்வாய்க்கிழமை (தை 30 – ஜ. அவ் 21) முழக்கம் 8

## ராஜீவ் லலித் பேச்சுவார்த்தை திருப்தி அளிப்பதாகவில்லை!

பாரதப் பிரதமருக்கும் அமைச்சர் அத்துலத்முதலிக்குமிடையிலான பேச்சுவார்த்தையின் பலாபலன் திருப்தி அளிப்பதாக அமையவில்லை என்று இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களும் இதே கருத்தை நேற்று வலியுறுத்தியுள்ளன. இதற்கிடையே நாடு திரும்பிய அமைச்சர் லலித், 'உச்சி மாநாட்டு அடிப்படையில் இரு நாட்டுத் தலைவர்களும் பேச்சு வார்த்தை நடத்த அவசியம் ஏற்படாது. ஆனால் சந்திப்பது சாத்தியமாகும்'' என்று தெரிவித்துள்ளார். பயங்கரவாத நடவடிக்கைகள் ஒழிந்தலன்றி பயங்கரவாதிகளுடன் பேச்சுவார்த்தைக்கு இடமில்லை என்று தெரிவித்த அவர். இனப்பிரச் —4-ம் பக்கம் பார்க்க

# ஜீ. சி. ஈ. விசேஷ பரீட்சை ஒரு வாரம் ஒத்திவைப்பு இம்மாதம் 27 முதல் மார்ச் 8 வரை நடைபெறும்

இம்மாதம் 20ம் திகதி முதல் 28ம் திகதிவரை நடைபெற விருந்த ஜீ சி ஈ சாதாரண தரத்துக்கான விசேஷ பரீட்சை, மேலும் ஒரு வாரத்துக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக யாழ் மாவட்ட கல்விப் பணிப் பாளர் திரு. எம் சிமியாம் பிள்ளைநேற்றுத் தெரிவித்தார்

இதன்படி மேற்படி பரீட்சை இம்மாதம் 27ம் திகதி புதன்கிழமை முதல், மார்ச் மாதம் 8ம் திகதி வெள்ளிக் கிழமைவரை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா மாவட்டங்களில் நடத்தப் படும்

27ம் திகதி ஆரம்பமாகும் பரீட்சைக்கான பிரவேசச்சீட்டு நோசுசி ஆகியன இம்மாதம் 23ம் திகதிக்கு முன்னர் மாணவர்களுக்குக் கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

மன்னார் பிரஜைகள் குழுவினர் தம்மை நேரில் சந்தித்து, இப்பகுதி மாணவர்கள் பரீட்சைக்கு ஆயத்தம் செய்ய மேலும் ஒருவாரம் நீடிப்புத் தருமாறு கேட்டதற்கிணங்கவே 20ம் திகதி ஆரம்பமாகவிருந்த பரீட்சையை 27ம் திகதிக்குப் பின்போட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் திரு. பி காரியவாசம் நேற்றிரவு 'ஈழமுரசு'க்குத் தெரிவித்தார்.

# முன்னாள் எம். பி. தங்கத்துரை திருமலையில் கைது!

## ஈழம் இயக்கத்துக்கு நிதி வழங்கினாராம்; மேலும் இருவர் இவருடன் கைதாகினர்

(திருமலை)

மூதூர் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், திருமலையின் முன்னாள் மாவட்டசபைத் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய பிரமுகர்களில் ஒருவருமான அ. தங்கத்துரை நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுவிசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

ஈழம் இயக்கத்துக்கு நிதி உதவி அளித்து ஆதரித்த குற்றச்சாட்டின் பெயரில் இவர் கைது செய்யப்பட்டதாக ராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது. இவருடன் சேர்த்து மேலும் இருவர் கைதாகியுள்ளனர்.

நேற்று முன்தினம் திருமலையிலிருந்து மூதூருக்குச் செல்லும் வழியில் இவர் கைதானதாகத் தெரியவந்துள்ளது தற்போது திருமலையில் தடுத்து வைத்து விசாரிக்கப்படும் இவரை அவரது சகோதரர் ஒருவர் நேற்று பார்வையிட அனுமதிக்கப்பட்டார்.

## மன்னார்ப் பகுதியிலிருந்து 7 படகில் சென்ற மேலும் 186 தமிழ் அகதிகள் தமிழகத்தில் அடைக்கலம்

(ராமேஸ்வரம்)

இலங்கையில் மிதந்த இன்னலுறுவதாகக் கூறி தலைமன்னார், மன்னார் பகுதிகளைச் சேர்ந்த மேலும் 186 பேர் ஏழு படகுகளில் பாரதக் கரையைப் புகலிடம் நாடி வந்தடைந்தனர் என அறிவிக்கப்பட்டது.

படகுத் துறையிலிருந்து அருகிலுள்ள ஊருக்கு நடந்து செல்லக்கூட முடியாத அளவுக்கு அவர்கள் மிகவும் பலவீனமான நிலையில் இருந்ததாகவும், ''கற்பனைக்கும் எட்டாத துன்பம், மனவேதனை —4-ஆம் பக்கம் பார்க்க

## செங்கலடிக் குண்டு வீச்சு

செங்கலடியில் முக்கியஸ்தர் ஒருவரின் இல்லத்தின் மீது நேற்று முன்தினமிரவு குண்டு வீசப்பட்டதாம் அந்த பாது —4-ம் பக்கம் பார்க்க

## அடங்காத் தமிழர் தலைவர் சுந்தரலிங்கம் காலமானார்

(வவுனியா)

இலங்கையின் மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவரும், முன்னாள் வவுனியா எம் பி, யும், முதலாவது வர்த்தக அமைச்சரும், அடங்காத் தமிழர் முன்னணித் தலைவருமான திரு ஸி சுந்தரலிங்கம் 89 வயதில் நேற்று நண்பகல் வவுனியாவிலுள்ள தமது இல்லத்தில் காலமானார்.

கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் உப அதிபராகவும், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கணிதப்பேராசிரியருமாக புகழ்பெற்று விளங்கிய திரு. சுந்தரலிங்கம், டி எஸ். சேனநாயக்கா அமைச்சரவையில் தாம் வகித்த வர்த்தக அமைச் —4ம் பக்கம் பார்க்க

### கூட்டணி 'ஆலாலு' இரங்கல்

## தமிழ் தலைவர்களுள் தனித் தன்மையானவர் 'சுந்தர்'

முன்னாள் பேராசிரியர் மூத்த தமிழ்த் தலைவர் திரு ஸி: சுந்தரலிங்கம் அமரராகி விட்டார் என்ற செய்தி தமிழ் இதயங்களைத் திகைக்க வைத்துள்ளது. அமரராகி விட்ட பெரியார் 'சுந்தர்' இந்த நூற்றாண்டில் ஈழத் தமிழர்கள் மத்தியில் வாழ்ந்த தமிழ்த் தலைவர்களுள் தனித் தன்மையானவர் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிர்வாகச் செயலாளர் திரு மு ஆலாலசுந்தரம் விடுத்துள்ள இரங்கலுரையில் தெரிவித்துள்ளார்.

கல்வித்துறை. அரசியல், சட்டத்துறை ஆகியவற்றில் தனது சாதனை முத்திரைகளைப் —4-ம் பக்கம் பார்க்க

### காங்கிரஸ் குமார் இரங்கல்:

## தமிழினத்தின் முதுபெரும் தலைவர் 'அடங்காத் தமிழன்'

தமிழ்த் தேசிய இனத்தின் சரித்திரத்தில் மிகவும் சோதனை மிக்க இக்கட்டத்தில் தமிழ் இன முதுபெரும் தலைவர் திரு. ஸி சுந்தரலிங்கத்தின் மறைவு தமிழ் இனத்திற்கு ஒரு பேரிழப்பாகும் என்று தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

''முப்பது வருடங்களுக்கு முன்னதாக குறிப்பாக 1954 ஜூனில் ஒரு சுதந்திர தமிழ்த் தேசத்தை பெறுவதற்கு பிரேரணையைப் பாராளு மன்றத்தில் கொண்டுவந்தவர் அவர். —4-ம் பக்கம் பார்க்க

### கல்வி அமைச்சர் ரணில் பேச்சு:

## பயங்கரவாதத்தை இராணுவம் மூலமே ஒழிக்க முடியும்; வட கிழக்கு இணைப்பு இல்லை

(எல்பிட்டிய)

''வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒருங்கிணைப்பதற்கு எந்த இடமும் அளிக்கப்பட மாட்டாது'' என்று கல்வியமைச்சர் ரணில் விக்கிரமசிங்க எல்பிட்டியில் நடைபெற்ற வைபவமொன்றில் பேசுகையில் வலியுறுத்திக் கூறினார்.

''பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட இராணுவ பலத்தைப் பயன் படுத்துவதைத் தவிர வேறு என்ன வழியிருக்கிறது?'' என்று இவ்விழாவில் உரை நிகழ்த்துகையில் அவர் வினா எழுப்பினார். — 4ம் பக்கம் பார்க்க

## பண்ணைப் பால வீதியும் பாதிப்பு

பண்ணைப் பாலத்தை அடுத்துள்ளபிரதான வீதியின் ஒரு பகுதி குண்டு வெடிப்பினால் —4-ம் பக்கம் பார்க்க

## புதிய ராணுவத் தளபதியாக பிரிகேடியர் நளின்நியமனம்

வட பகுதி ராணுவ இணைப்பு அதிகாரியாகக் கடமையாற்றிய பிரிகேடியர் நளின் செனிவரத்தின நேற்று புதிய ராணுவத் தளபதியாக நியமனம பெற்றார். இவர் முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அனு செனிவரத்தினவின் சகோதரராவார்.

இது வரை ராணுவத் தளபதியாகக் கடமையாற்றிய ஜெனரல் திஸ்ஸ வீரதுங்க நேற்று முதல் பாதுகாப்புப் படைகளின் தலைமை அதிகாரியாக நியமனம் பெற்றார் இப்பதவி புதிதாக உருவாக்கப்பட்டதாகும்

# குருநகர் வீதிகளில் குண்டு வெடிப்பு

## நகரில் பதற்றம் பாடசாலைகள் மூடப்பட்டன!

குருநகர் பகுதியில் நேற்று முன்தினமிரவு தொடர்ச்சியாகக் கேட்ட குண்டு வெடிப்புச் சம்பவங்களால் யாழ்நகர் முழுவதும் நேற்று அசாதாரணமான அச்சம் கலந்த அமைதி நிலவியது. பொது மக்கள் பெரும் பதற்றத்துடன்காணப் பட்டனர்.

நகரிலுள்ள பாடசாலைகளுக்கு மாணவர் வரவு குறைந்திருந்தது சகல பாடசாலைகளும் சில மணிநேரங்களில் மூடப்பட்டன.

குருநகர், ஈச்சமோட்டை, கொய்யாத் தோட்டம் பகுதி மக்கள் பெட்டி, படுக்கைகள் முக்கிய சாமான்கள் சகிதம் பிள்ளைகளையும் தூக்கிக் கொண்டு அண்மையிலுள்ள தேவாலயங்கள், கோவில்களில்குடியேற ஆரம்பித்தனர்:

போக்குவரத்துச் சேவைகள் சீர்குலைந்தன. தனியார் வாகனங்கள் ஓடி மறைந்தன. வர்த்தக நிலையங்கள் நண்பகல் வரை ஒற்றைக்கதவில் திறந்திருந்தன.

குருநகர் பிரதான பாதையின் பல இடங்களிலும்குண்டு வெடித்திருந்ததால் வாகனங்கள் நடமாடுவது சிரமமாக இருந்தது எந்தவேளையிலும் —4-ம் பக்கம் பார்க்க

## மட்டு நகரில் இரு சடலம்

மட்டக்களப்புப் பகுதியில் நேற்று ஒருவர் சுடப்பட்டு மின் கம்பத்தில் கட்டப்பட்டி —4-ஆம் பக்கம் பார்க்க

## இளைஞர் ஆண்டு விழாவில் செங்கை ஆழியான்:

# போராட்டங்களும், உயிர்இழப்புகளும் தமிழனைப் பொறுத்தமட்டில் புதியன அல்ல!

(கிளிநொச்சி)

''போராட்டங்கள் அதனால் ஏற்படும் உயிரிழப்புகள் பாதிப்புகள், இன்னல்கள், என்பன தமிழனைப் பொறுத்த மட்டில் புதியனஅல்ல. ஈழத்தமிழனின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் இது புரியும். ஆயிரத்து முன்னூற்றைம்பதாம் ஆண்டு தொடக்கமே இலங்கையின் வடக்கு கிழக்கில் வாழும் தமிழன் எத்தனையோ படையெடுப்புகளையும் போராட்டங்களையும் இன்னல்களையும் எதிர்கொண்டு வந்துள்ளான் தற்போதுள்ள நிலையும் அதுவே'' ஜெயந்தி நகரில ஜெயந்தி நகர் இளந்தீபம் இளைஞர் கழக ஏற்பாட்டில் சர்வதேச இளைஞர் ஆண்டு அறிமுகக்கூட்டமும், நாட்டில் அமைதி வேண்டி பொங்கல் பூஜையும்வழிபாடும் நடைபெற்றது இதில பிரதம விருந்தினராக்கலந்துகொண்ட பிரபல எழுத்தாளர் செங்கை ஆழியான் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசும் போது ''இக்கால கட்டத்தில் இவ்வருஷ பூஜை வழிபாடுகள் இளைஞர்கள் மேற்கொள்வது வரவேற்கத்தக்கதே, தமிழன் தற்போது அடைந்து வரும் இன்னல்கள் மத்தியில் இப்படியான வைபவங்கள், கலை விழாக்கள் அவசியம்தானா? என ஒரு சாரார் வினா எழுப்பலாம் போராட்டங்கள் இன்னல்கள் இவையெல்லாம் நம் வரலாற்றோடு பின்னிப் பிணைந்தவை அதற்காக சமூகத்தோடு ஒன்றிப்போன கலைகலாச்சாரம் அதைப்பேணி பாதுகாப்பதற்காக எடுக்கப்படும் நிகழ்ச்சிகள், சமய வழிபாடுகள் என்பன தவிர்க்கப் படமுடியாதவை'' என்றும் கூறினர்.

தொடர்ந்து சமய சொற்பொழிவாற்றிய எழுத்தாளர் கோபபாய். எஸ் சிவம் ''தற்கால இளைஞர்கள் மத்தியில் சமய வழிபாடு மிகவும் அவசியமானதுபழமைவாய்ந்த நமது கலை, கலாச்சாரத்தைப் பேணிப் பாதுகாக்கும் பணி இளைஞர்கள் கைகளிலேயே உளளது. புதுமையைப் புகுத்துதல் என்ற போர்வையில் பழமை புறக்கணிக்கப்படக் கூடாது. பழமையின் அத்திவாரத்திலேயே புதுமை கட்டியெழுப்பப்பட வேண்டும்'' என்று கூறினர்.

கிளிநொச்சிப் பகுதி திட்டமிடல் அதிகாரி திருமதி. பவானி சிறீஸ்கந்தராஜா குருகுலம் நிர்வாகி திரு. கதிரவேலு. திரு.ரி எஸ் தருமசிங்கம் ஜெயந்திநகர் கிராம அபிவிருத்திச் சபைத் தலைவர் செல்வன் ஆ. பத்மநாதன் உட்பட பலர் உரையாற்றினர். மாலையில் இளம்தீபம் கழக இளைஞர்களின் கரப்பந்தாட்ட நிகழ்ச்சியும் யுவதிகளின் வலைப்பந்தாட்டமும் நடைபெற்றது.




✱ பரந்தன் ஜோதிக்குமார் உதயபுஷ்பம் தம்பதிகளின் மகன் சுதர்சன் இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ கல்வியங்காடு சரவணபவான் சத்தியபாமா தம்பதிகளின் மகள் சாருமதி இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்,

✱ அரியாலை பத்மநாதன் சிவபாக்கியம் தம்பதிகளின் மகன் மயூரன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ கோப்பாய் தெற்கு குகநாதன் ரேணுகா தம்பதிகளின் மகன் கிஷோக்குமார் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ கரணவாய் தெற்கு பசுபதி சிவனத்தங்கம் தம்பதிகளின் மகன் ஜெயசீலன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ உருத்திரபுரம் சிவநகர் கந்தசாமி மகேஸ்வரி தம்பதிகளின் மகன் சுதாகன் இன்று தனது ஒன்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ முல்லைத்தீவு, சிவப்பிரகாசம் இராசேஸ்வரி தம்பதிகளின் மகன் ரமேஸ்வரன் இன்று தனது ஆறாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்,

✱ நல்லூர் தவராசா தேவராணி தம்பதிகளின் மகன் சுபீர்குமார் இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்;

✱ மாவிட்டபுரம் அருணகிரிநாதன் ஜெயபத்திராவதி தம்பதிகளின் மகன் நிருபராஜ் இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ சுதுமலை வடக்கு செல்வராசா இரத்தினலட்சுமி தம்பதிகளின் மகன் ரஞ்சிதகுமார் இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ நெடுந்தீவு மேற்கு அன்னலிங்கம் - மாணிக்கம் தம்பதிகளின் மகள் ஜெயமலரி இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

# யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இந்த வாரத்தில் இலவச பாடநூல் கிடைக்கும்

(புங்குடுதீவு)

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்கள் எதிர் பார்த்திருந்த இலவச பாடநூலகள் தற்போது வந்து சேர்ந்துள்ளன. யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிமியாமபிள்ளை மேற்கொண்ட துரித முயற்சியின் பேறாகவே இநநூல்கள் இங்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

கல்விச் சேவைகள் அமைச்சு யாழ் மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு இவ்வாண்டு ஆரம்பத்தில் விநியோகிப்பதற்கு ஒழுங்கு செய்திருந்த இலவச பாடநூல்களை இங்கு கொண்டு வருவதற்குப் போக்குவரத்து வசதியீனங்கள் பெரும் முட்டுக்கட்டையாக இருந்தன இதனால் இப்பகுதி மாணவர்களுக்குப் பாடசாலை அதிபர்கள் பழைய புத்தகங்களையே வழங்கியிருந்தனர்.

யாழ். கல்விப் பணிப்பாளர் திரு ம சிமியாம்பிள்ளை இக்குறைபாட்டைப் போக்குதற்கு மேற்கொண்ட பெரு முயற்சி தற்போது பயனளித்துள்ளது. க. பொ. த. சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு செய்யும் பணியில் ஈடுபடும் பொருட்டு இங்கிருந்து கொழும்பு சென்ற பரீட்சகர்களை ஏற்றிச் சென்ற இரு விசேட பஸ் வண்டிகளும் அங்கிருந்து இலவச பாடநூல்களை ஏற்றிக் கொண்டு இங்கு திரும்பியுளளன.

இப்பாட நூல்கள் தற்போது வட்டாரக் கல்வியதிகாரிகள் மூலம் அவ்வப்பகுதிப் பாடசாலை அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பழைய பாட நூல்களுக்குப் பதிலாக புதியபாட நூல்கள் பெருமளவில் மாணவர்களுக்கு இதன் மூலம் விரைவில கிடைக்கவுள்ளன.

குறிப்பிட்ட சில பாடநூல்கள் இம்முறையும் கல்விச் சேவைகள் அமைச்சால் இங்கு அனுப்பி வைக்கப்படவில்லை எனத்தெரிய வருகிறது. இதனால் தனியார் வெளியிட்ட நூல்களையே மாணவர்கள் பணம் கொடுத்து வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

## வரிவிளம்பரம்

### விற்கவும் வாங்கவும்

சகலவித பொருட்களும் விற்கவும் - வாங்கவும் தினமும் வாருங்கள்.

ஏலவிற்பனை நிலையம்
கோப்பாய்

### கோழிக்குஞ்சு

Bairaha Farms புரொயிலர் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். சற்குணராசா அன் பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில்

கலர் பிலிம் சுருள்களைச் சிறந்த முறையில் குறுகிய காலத்தில் Processing and Printing செய்து கொள்ள நாடுங்கள் - கொழும்பு ஸ்ருடியோ யாழ்ப்பாணம்.

### சேவை

சகல கிரகதோஷ நிவிர்த்திகளுக்கும் சகலவித சௌபாக்கிய விருத்திகளுக்கும் சாஸ்திர விதிப்படி செய்யப் பெற்றதும் பூஜையில் வைக்கப்பெற்றதுமான ஸ்ரீ சக்கரம் பெற்றுக் கொள்ளலாம். ஏல விற்பனை நிலையம் கோப்பாய்-

## சிரமதானம்

(சரசாலை)

பாடசாலை வாரத்தை முன்னிட்டு சரசாலை சரஸ்வதி வித்தியாலயத்தில் ஆசிரியர்கள் மாணவர்கள் ஒன்று சேர்ந்து பாடசாலையின் நாலாபக்கமும் உள்ள வேலியை அடைத்தனர், அத்துடன் காணி முழுவதையும் துப்பரவுசெய்தனர்.

## ஒரு வேண்டுகோள்

பலாலி இராணுவ முகாமில மின் திருத்துனராகக் கடமைபுரிந்த த. சத்தியமூர்த்தி என்பவர் தை மாதம் 10-ம் திகதி பருத்தித்துறை A G A. அலுவலகத்திற்கு அருகாமையில் தனது உறவினர் வீட்டில் இருந்தபொழுது; அதிகாலை 5-00 மணியளவில் இனந்தெரியாத ஆளொருவரினால் விசாரித்துவிட்டு விடுவதாகக் கூட்டிச் செல்லப்பட்டு ஒரு மாதம் ஆகின்றது இதுவரை அவரின் நிலையை அறிய முடியவில்லை. நீங்கள் நினைக்குமளவிற்கு அவர் துரோகம் எதுவும் செய்யவில்லை. இவர் பற்றிய கவலையினால் கடும் சுகவீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளேன். இவரைக் கூட்டிச் சென்றவர்கள் மனிதாபிமான முறையில் இவரை வீட்டிற்கு அனுப்பும்படியும் அவரின் உண்மையான நிலையை அறியக் குடும்பத்தினருடன் தொடர்பு கொள்ளும்படியும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி

திருமதி. நல்லம்மா தம்பிமுத்து
தாயார்

## விஞ்ஞானமும் கணிதமும்

# பரீட்சைக்கு மட்டுமன்றி வாழ்க்கைக்கும் உரியன

(சரசாலை)

பரீட்சைகளுக்கு மட்டுமன்றி அன்றாட வாழ்விலும தொடர்புடையனவாக விஞ்ஞான கணித பாடங்கள் உளளன. இவற்றைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அறிவுத் தெளிவும், போதிய கருவிகளும் பெற்றிருப்பது அவசியம. இத்தகுதிகளின்றிக் கற்பித்தல நடப்பதாலேயே பெருந தொகையான மாணவர்கள் இப்பரீட்சைகளில் தவறிவிடுகிறார்கள் என விஞ்ஞான வட்டாரக் கல்வி அதிகாரி எஸ். நடராசா கூறினர்.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில நடைபெற்ற மானிப்பாய் கல்வி வட்டார கனிஷ்ட சிரேஷ்ட அதிபர்களுக்கான விசேட கூட்டத்தில் உரையாற்றிய திரு. நடராசா மேலும் குறிப்பிடுகையில் சகல கனிஷ்ட சிரேஷ்ட பாடசாலைகளிலும் மாணவர் விஞ்ஞான சங்கங்கள் நிறுவி மாணவர்களது சுதந்திரச் சிந்தனைகளையும் கண்டுபிடிப்புகளையும் வளர்க்க வேண்டும் என்றும் இது குறித்த கருத்துக்கள் பணிகள் பற்றி விஞ்ஞான கணித ஆசிரியர்களோடு தான் நேரில் விவாதிக்க விரும்புவதாகவும் தெரிவித்தார்.

கூட்டத்திற்கு வட்டாரக் கல்வி அதிகாரி எஸ் தனஞ்செயன் தலைமை வகித்தார்.

## அமைதியான சிவராத்திரி

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துசமய அபிவிருத்திச் சங்கம் எதிர்வரும் மகா சிவராத்திரி வழிபாட்டை ஆலயங்களில அமைதிவழிப் பிரார்த்தனைகளுடனும, மற் சிந்தனைகளுடனும அனுஷ்டிக்குமாறு ஆத்மமக்களை வேண்டியுள்ளது. அத்துடன் அன்றைய தினம வீடியோ படங்களை பார்ப்பதை தவிர்க்குமாறு கேட்டுள்ளது.



உ
சிவமயம்

## அந்தியேட்டி

மலர்வு
8-2-1962

உதிர்வு
21-8-1984

### செல்வி அப்புத்துரை நாகநந்தினி (குஞ்சம்மா)

எதிர்வரும் இரத்தாக்ஷி வருஷம் மாசி மாதம் 3-ந் திகதி (14-2-1985) வியாழக்கிழமை அந்தியேட்டிக் கிரியைகள் செய்ய இருப்பதால் அவ்வமயம் கிரியைகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவரையும் பங்கு பற்றுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்
குடும்பத்தார்

நாகபூசணி தேவஸ்தானம்
(பாம்புக் கமம்) ஐந்தாம் வாய்க்கால், பரந்தன்.

உங்கள் ஆபரணங்களுக்கு
கடன் உதவி
பெற இன்றே நாடுங்கள்

36% அதிக வட்டி வழங்கும் நிதி நிறுவனம்
தமிழர் நிதியம்
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437

ஈழமுரசு



# அமெரிக்க உளவு விமானம்: பாகிஸ்தான் பெற முயற்சி!

(இஸ்லாமாபாத்)

"அமெரிக்காவிடம் இருந்து அதிநவீன வேவு விமானங்களைக் கொள்வனவு செய்யும் பொருட்டு பாகிஸ்தான் அரசு அமெரிக்காவுடன் பேரம்பேசிவருகிறது" என்று பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஷியா-உல்-ஹக் லண்டன் சஞ்சிகை ஒன்றிற்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கிறார். "எல்லைப் பாதுகாப்புக்குக் குறிப்பாக நில, வான் பாதுகாப்புக்கு இவ்விமானங்கள் அதிமுக்கிய தேவையாக இருக்கின்றன" என்றும் அவர் கூறினர்.

'அமெரிக்கா 1986ம் ஆண்டு வரை மூவாயிரம் கோடி டாலர் இராணுவக் கடனுதவி வழங்க சம்மதித்துள்ளது. இவ்வுதவி தொடர வேண்டுமென்பதே பாகிஸ்தானின் விருப்பமாகும்.' என்று சொன்ன ஜெனரல் ஷியா, "பாகிஸ்தானில் இராணுவச் சட்டங்களை உடனடியாக நீக்கும் எண்ணமில்லை. பொதுத் தேர்தலின் பின்பும் நிலைமை படிப்படியாகவே மாமுலுக்கு வரும்" என்றார்.

பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியுடனுன சந்திப்பு குறித்துப் பிரஸ்தாபிக்கையில் வலுமிக்க பாரதத்தை பாகிஸ்தான் விரும்புகிறது அவருடன் சந்திப்பு நடத்தியதன் மூலம் நட்பு நம்பிக்கை கூடியிருக்கிறது" என்று ஜெனரல் ஷியா சொன்னர்.

## உதய சிந்தனை

பழைய மரம் நன்ருக எரிக்க உதவும்; பழைய நண்பர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள்; பழைய நூல்கள் படிக்க வேண்டுவன.

- டேகன்

37, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி : 23336

## இதய ஒலி

12-2-85 செவ்வாய்க்கிழமை (இரக்தாக்ஷி தை 30)

# யாழ்ப்பாணக் குடா அகதி முகாமாகிறது

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த சில மாதங்களாக நிலவி வரும் தொழிலின்மை, போக்குவரத்து வசதியின்மை, வருவாயின்மை ஆகியவற்றின் உச்சக்கட்டமாக தற்போது உணவுப் பொருளின்மை உருவாகியுள்ளது.

அத்தியாவசிய உணவுப் பொருட்களான அரிசி, மா, சீனி ஆகிய மூன்று பொருட்களுக்கும் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினுல் கள்ளச்சந்தை என்ற பெருச்சாளி தனது கைவரிசையைக் காட்ட ஆரம்பித்துள்ளது.

உணவுத் திணைக்களத்தின் களஞ்சியத்திலேயே அரிசியும், மாவும் வரட்சி நிலைக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ரயில் போக்குவரத்துச் சீர்குலைவை ஒரு சாட்டாக வைத்து அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டை சம்பந்தப்பட்ட விநியோகஸ்தர்கள் உருவாக்கியுள்ளனர்.

கடல் மார்க்கமாக கப்பல்களில் அனுப்பக்கூடிய இப்பொருட்களை அனுப்புவதிலும் அவர்கள் காட்டும் தாமதம், யாழ்ப்பாண மக்களைத் திட்டமிட்டு இம்சித்து, அடிபணியவைக்கும் ஒரு சூழ்ச்சியாகவும் இருக்கலாம்.

பருத்தித்துறை பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் கடந்த வாரம் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருக்கு எழுதிய ஒரு கடிதமும், தினசரி வடபகுதி அகதிகள் வள்ளங்கள் மூலம் தமிழ்நாட்டுக்குச் செல்வதாகக் கிடைக்கும் செய்திகளும் இச்சந்தர்ப்பத்தில் கவனிக்கப்பட வேண்டியன.

வடமராட்சிப் பகுதியை யாழ்ப்பாணத்திலிருந்து துண்டாடி, தனிமைப்படுத்தி, போக்குவரத்தைப் பிரித்து வைத்து, அந்தப் பகுதி மக்களைப் பட்டினிச்சாவு போட எடுக்கப்படும் முயற்சியை பேராசிரியர் நன்கு விளக்கியுள்ளார்.

இந்த நிலை வடமராட்சிக்கு மட்டுமன்றி, முழுக் குடாநாட்டுக்குமே இப்போது ஏற்பட்டுள்ளது. கிளிநொச்சியின் எல்லைப் பிரதேசத்தில் காவற்பணிகளில் ஈடுபடுவோரின் நெருக்கடிகளால் உணவுப் பொருள்களை ஏற்றி வர தனியார் வாகனங்கள் செல்ல முடியாத அவலநிலையில, யாழ்ப்பாணம் "செயற்கை மரணத்தை" எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றது.

கடந்த வாரப் பிற்பகுதியில் சுமார் ஆயிரத்து ஐநூறு யாழ்ப்பாண அகதிகள் பத்தொன்பது படகுகளில் தமிழகம் சென்றுள்ளார்கள். இவர்கள் உல்லாசப் பிரயாணிகளாக, விடுமுறையைக் கழிக்க அங்கு செல்லவில்லை.

நேற்று முன்தினம் மேலும் நூற்று எண்பத்தாறு பேர் இவ்வாறு சென்றுள்ளார்கள். மரணத்தின் விளிம்புக்குத் தள்ளப்பட்ட நிலையில, உயிரைக் கையில பிடித்துக் கொண்டு, உடலை வள்ளத்தில் ஏற்றி சட்டவிரோதமாக தமிழகத்துக்குச் செல்லும் தேவை எதற்காக ஏற்பட்டது.

ராமேஸ்வரம் சென்றடைந்த அகதிகளில் பலரும் பல நாள் உணவின்றி இருந்ததாகவும், சிலர் நடந்து செல்வதற்குக் கூட சக்தியிழந்து காணப்பட்டனர் என்றும் இந்திய வானெலிச் செய்தி தெரிவிக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் நிலவும் பஞ்சத்துக்கும், மக்கள் எதிர் நோக்கும் பட்டினிச்சாவுக்கும் இந்த சம்பவங்களே நல்ல சான்றுகளாகும்.

கையில் காசில்லை; கடன்பட்டுக் காசைப் பெற்றுல் கடைகளில் பொருட்கள் இல்லை. அரசின் பாராமுகத்தினுல் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இங்கு வருவதில் தாமதம்.

இது போதாதென்று, கையிருப்பில் இருக்கும் அற்ப சொற்பத்தையும் கள்ள மார்க்கட்டில் ஆனை விலை குதிரை விலைக்கு விற்கும் எமது வர்த்தகர்கள்.

பதுக்கல் அரிசி கொத்து பதினுன்கு ரூபா வரை சென்று விட்டது. மா கிலோ பத்து ரூபாவை எட்டிப் பிடித்துள்ளது. கடைகளில் பாணைக் காண்பதே ஒரு அதிர்ஷ்டம்.

அரசாங்கத்தின் பாரபட்சமான நடவடிக்கைகளும், இங்குள்ள சமூக விரோதிகளின் பதுக்கல், கள்ள மார்க்கட் நடவடிக்கைகளும் சேர்ந்து குடாநாட்டு மக்களை மரணக் கிடங்கில் தள்ளிக் கொண்டிருக்கின்றன.

இதனுல் யாழ்ப்பாணக் குடாநாடே இப்போது ஒரு அகதி முகாமாக மாறிக் கொண்டிருக்கிறது.

## மலேஷியாவில் தேசியமய நடவடிக்கை?

(கோலாலம்பூர்)

மலேசியாவில் வெளிநாட்டவரால் நடத்தப்படும் கம்பெனிகள் தேசிய மயமாக்கப்படும் நிலை தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மலேஷியப் பிரதமர் முஹமத் இது குறித்துத் தெரிவிக்கையில் "இக் கம்பனிகள் முற்ருகத் தேசிய மயமாக்கப்படும் நடவடிக்கை உடனடியாக இல்லை" என்ருர்.

பொருளாதார உதவி:

## சீனப் போக்கில் அமெரிக்கா அதிருப்தி: நிதியும் நிறுத்தம்

(பீக்கிங்)

குடும்ப கட்டுப்பாட்டுத்திட்டத்திற்கென ஐ. நா. ஸ்தாபனத்திற்கு அமெரிக்காவினுல் வழங்கப்பட்டுவந்த நிதியுதவி நிறுத்தப்பட்டுள்ளது குறித்து சீன விசனம் தெரிவித்துள்ளது.

தான் வழங்கும் இந்நிதியை சீன கருச்சிதைவு நடவடிக்கைகளுக்குப் பயன் படுத்துகிறது என்று அமெரிக்கா சுமத்தியுள்ள குற்றச்சாட்டில் உண்மையில்லை, கருச்சிதைவு நடவடிக்கைக்கு இந்நிதியில் எள்ளளவும் எடுக்கப்படவில்லை என்று சீன குடும்பக்கட்டுப்பாட்டு ஸ்தாபனப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சிரிய ஜனுதிபதி அசாத்

## மேலும் ஏழாண்டு பதவியை நீடிப்பது சாத்தியமாகுமா?

(லண்டன்)

மூன்ருவது தடவையாக மேலும் ஏழாண்டுகளுக்கு ஜனுதிபதி பதவியில் நீடிக்க சிரியாவின் ஜனுதிபதி அஸாத் நேற்று பொதுஜன வாக்கெடுப்பு நடத்தினுர். இதன் முடிவுகள் இன்னமும் வெளியிடப்படவில்லை.

இதற்கு முன்னதாக ஜனுதிபதிக்கு 99-6 சதவீத வாக்குகள் கிடைத்திருந்தன மீண்டும் ஜனுதிபதிப் பதவியில் நீடிப்பதற்கு ஜனவரி மாதம் 25ம் திகதி சிரியப்பாராளுமன்றம் ஜனுதிபதிக்கு அங்கீகாரமளித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் களத்தில் மணவாளன்

(சென்னை)

வடஆற்காடு திருப்பத்தூர் சட்டசபைத் தொகுதியில் ஆந்திரா காங்கிரஸ் வேட்பாளராக திரு. எஸ். பி. மணவாளன் போட்டியிடவுள்ளார். இந்த இடைத் தேர்தல் மார்ச் மாதம் ஐந்தாம் திகதி நடைபெறவுள்ளது.

## சீக்கிய விதவையர் மறுமணம்

(புதுதில்லி)

பிரதமர் திருமதி காந்தியின் கொலையையடுத்து உண்டான கலவரத்தில் தம் கணவரை இழந்த பதினைந்து சீக்கிய விதவைகள் புதுடில்லியில மறுமணம் செய்து கொண்டுள்ளனர். இவ்வைபவம் சீக்கிய ஆலயம் ஒன்றில் இந்துக்களும் சமுகமளித்திருக்க நடைபெற்றது.

மேலும் இத்தகைய விதவைகள் இருபத்தைந்து பேருக்கு இவ்வார இறுதியில் மறுமணம் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அணு ஆயுத விலக்கு வலயம்

## 21 நாடுகளின் கூட்டுமுயற்சி வியர்த்தம் என்று அறிவிப்பு

(நியுயோர்க்)

உலகின் பல பாகங்களிலும் அணுஆயுத விலக்கு வலயங்களை உருவாக்குதல் பொருட்டு ஐ. நா. சபையால் தோற்றுவிக்கப்பட்ட இருபத்தொரு நாடுகள் கொண்ட ஸ்தாபனம் தனது முயற்சியில் தோல்வி கண்டதால் தன்முயற்சியைக் கைவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தம் சகநாடுகளுடன் இந்நிலையினை உருவாக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி கைகூடாது போயிற்று என்று இந்த ஸ்தாபனம்கூறியுள்ளது.

மத்திய கிழக்கு, வட ஐரோப்பா, தெற்காசிய நாடுகள் மத்தியில் இம் முயற்சி மேற்கொள்ளப் பட்டிருந்ததாகவும் கூறப்பட்டது.

ஆயுதம் ஏற்றிச் சென்ற விமானம்

## விசாரணை வேண்டும் என ஜனுர்த்தனன் கோரிக்கை

(சென்னை)

இலங்கைக்கு ஆயுதங்களை ஏற்றிச் செல்கையில் திருவனந்தபுரம் விமான நிலையத்தில் தரித்து நிற்கையில் தடுத்து வைக்கப்பட்டு பின் விடுவிக்கப் பட்ட விமானச் சம்பவம் குறித்து விசாரணை நடத்துமாறு உலகத் தமிழ் ஈழ் முன்னணி பேரவைத் தலைவர் டாக்டர் இரா. ஜனுர்த்தனன் தந்தி மூலம் பாதுகாப்பு மந்திரி திரு. பி வி. நரசிம்மராவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

"இலங்கையில் தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்த இவ்வாயுதங்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளன. இவ் விமானம் திருவனந்தபுரத்தில் தரித்துச் சென்ற சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்படுவது அவசியம்" என்று அவர் இத்தந்தியில் கோரியுள்ளார்.

இதேவேளை இவ்விமானம் கடும் பாதுகாப்புடன் கொழும்பில் தரையிறங்கியதாக இந்திய வானெலியின் மாநிலச் செய்தியில் நேற்றுக் காலை தெரிவிக்கப்பட்டது.

## கெரில்லா—செம்படை அச்சுறுத்தல்

(பொன்)

மேற்கு ஜெர்மனியின் ஜனுதிபதிக்கும், பிரதமருக்கும் கெரில்லாக்கள், செம்படையினரால் பலத்த அச்சுறுத்தல் தோன்றியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

## ஈரானும் இணக்கம்

(தெஹ்ரான்)

ஈரான் மசகு எண்ணெய் விலையைச் சிறிதளவு குறைந்துள்ளது. ஜனவரி மாதம் ஜெனீவாவில்நடைபெற்ற 'ஒபெக்' நாடுகளின் எண்ணெய் வளத்துறை அமைச்சர்கள் கலந்து கொண்ட மாநாடு ஒன்றில் எண்ணெய் விலையைக் குறைப்பதில் பொதுவான உடன்பாடு ஒன்று உருவாகியிருந்தது.

ஆனுல் ஈரானும் வேறு இரு எண்ணெய் உற்பத்தி நாடுகளும் எண்ணெய் விலையைக் குறைக்க அந்நேரம் மறுப்புத் தெரிவித்திருந்தன.

ஈரான் இப்போது எண்ணெய் விலையைக் குறைப்பதற்கு ஒப்புக் கொண்டுள்ளது 'ஒபெக்' நிறுவனத்திற்குத் திருப்தியையளித்துள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

ஈழமுரசு

## 'மாணவர் கல்வியில் கைவையாதீர்!'
## மாணவர் முன்னணி வேண்டுதல்

''நாம் தமிழீழப் போராட்டத்திற்கு எதிரானவர்களல்ல; மாருக எம்முடைய போராட்டத்தினைச் சரியான முறையில் புரிந்துகொண்டு அதற்கு எத்தகைய ரீதியில் பங்களிப்பினை வழங்கலாம் என்பதை உணர்ந்திருக்கின்றோம்'' என்று 'தமிழ் மாணவர் முன்னணி' வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது ''மாணவர் கல்வியில் கைவையாதீர்!'' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள இப்பிரசுரத்தில், டிசம்பரில் நடைபெற்ற க. பொ. த. பரீட்சை குழப்பப்பட்டது வருந்தத்தக்கதும் கண்டிக்க வேண்டியதுமான ஒரு செயலாகும். இன்று நாம் கற்கின்ற கல்விதான் எமக்கு அடிப்படையான அறிவு வளர்ச்சியைத் தந்து சமூகம் எதிர்நோக்கியுள்ள பாரிய பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திக்க வைக்கின்றது சீனப் புரட்சியில் 'மாணவர் இயக்க'மும் வியட்நாம் யுத்தத்தில் புரட்சிக் கல்விக்கூட மாணவர் பங்களிப்பும் உலக சான்றுகள் எனவே, கல்லூரி உபகரணங்களைக் கொள்ளையடிப்பதும் பரீட்சையைக் குழப்புவதும் கல்வியைப் பாதிக்கும் நடவடிக்கைகளே எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது

### சண்டிலிப்பாய், மாகியப்பிட்டியில்

# ஞாயிறன்று நடைபெற்ற தேடுதலில் பல இளைஞர் கைதாகி விடுதலையாகினர்

(மானிப்பாய்)

நேற்று முன்தினம் சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி, ஆலங்குளாய் பகுதிகளுக்கு அதிகாலை கவசவாகனங்களிலும், பஸ்ஸிலும் சீருடையணிந்து பெருந்தொகையாக வந்தவர்களால் சுற்றிவளைத்து மேற்கொள்ளப்பட்ட பலத்த தேடுதல் வேட்டையின்போது சண்டிலிப்பாயிலுள்ள சட்டத்தரணி ஒருவரின் வீடும் அதற்கருகிலுள்ள இன்னொரு வீடும் கதவுகள் உடைக்கப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது.

ஆலங்குளாயில் ஹெலிகொப்டா ஒன்று தாழப்பறந்து கண்காணிப்பிலீடுபட நடைபெற்ற தேடுதலின் போது வைரவர் கோவிலொன்றின் கதவுகள் உடைக்கப்பட்டு கோவில் பலத்தசோதனையிடப்பட்டதாம் வாழைமரம் நடப்பட்ட இடம் ஆழமாக தோண்டிப் பார்க்கப்பட்டது பூசகரும் கடுமையான விசாரணைக்குட்படுத்தப்பட்டார். அப்பகுதியிலுள்ள வீடொன்றும் குண்டுவைத்து முற்றாக தகர்க்கப்பட்டது

பலரைக் கைது செய்து அழைத்துச் சென்றபோது கைதானவர்களின் தாய்மார்கள் வந்திருந்த உயரதிகாரி ஒருவரிடம் தம்பிள்ளைகள் ஒன்றுமறியாதவர்களெனவும் அவர்களை விடுதலை செய்யுமாறும் அழுது முறையிட்டதால் இளைஞர்கள் அனைவரும் நிபந்தனைகளுடன் விடுதலை செய்யப்பட்டனர். குண்டு வைத்து தகர்க்கப்பட்ட வீட்டை பராமரித்து வரும் பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தரொருவரை மட்டும் தம்முடன் அழைத்துச் சென்றனராம்.

### பாதுகாப்புச் சபை

நாட்டினது பாதுகாப்பை ஒழுங்குபடுத்துவது அது சம்பந்தமான தீர்மானங்களை எடுப்பது என்பன தொடர்பாகக் கூட்டுச் செயல்பாட்டுச்சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன் தலைவராக படைகளின் தளபதி ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்தன இருப்பார். பிரதம மந்திரி, தேசிய பந்தோபஸ்து அமைச்சர், முப்படைத் தளபதிகள், பொலிஸ்மா அதிபர், புலனாய்வு பணிப்பாளர் நாயகம், ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகர், பொதுநிர்வாகப் பிரதம அதிகாரி, அமைச்சரவை, பாதுகாப்பமைச்சு, தேசிய பந்தோபஸ்து அமைச்சு என்பவற்றின் செயலாளர்கள், பாதுகாப்பமைச்சின மேலதிக செயலாளர் ஆகியோர் இச் சபையின் உறுப்பினர்களாவர்.

### மேலும் 186..

—1-ம் பக்கத் தொடர்

அடைந்துள்ளோம் நாம்'' என்று அவர்கள் உருக்கமாகக் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் பாரதக் கரையை அடைந்த அவர்களுக்கு உணவும், தங்குமிட வசதியும் வழங்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

### செகலடி குண்டு..

—1-ஆம் பக்கத் தொடர்

காவலுக்கு நின்றவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். ஆனல் அச் சமயம் வீட்டில் வேறெவரும் இருக்கவில்லை.

### பண்ணைப் பால .

1-ஆம் பக்கத் தொடர்

பாதிப்புக்குள்ளாகியுள்ளது இதனல் இப்பாதையூடான போக்குவரத்திலும் சிரமம் ஏற்பட்டுள்ளது

### பயங்கர வாதத்தை ..

—1-ஆம் பக்கத் தொடர்

அமைச்சர் தனது உரையில் ''வடக்கு, கிழக்கில் சிவில் நிர்வாகத்தை விரைவில் வழமைக்குக் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதற்கு பயங்கர வாதத்தை முதலில ஒழிக்க வேண்டியிருக்கிறது. நாட்டு மக்களின இறைமையையும் ஜனநாயக நிர்வாக முறையையும் காப்பாற்ற அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒருங்கிணைப்பதற்கு எந்த இடமும அளிக்கப்படமாட்டாது. தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் பேச்சு வார்த்தை நடத்த அரசாங்கம் தயாராக இல்லை. வாக்கெடுப்புமூலம் தெரிவான பிரதிநிதிகளுடனேயே அரசாங்கம் பேசவிரும்புகிறது'' என்ருர்.

### ராஜீவ் லலித் ..

1- ஆம் பக்கத் தொடர்

சினைக்கு பாரத அரசு எடுக்கக் கூடிய சாதகமான நடவடிக்கை தமிழ் நாட்டில் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பதெனவும் சொன்னர்.

### அடங்காத தமிழர் ..

1- ஆம் பக்கத்தொடர்

சர்பகவியை இந்திய பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்ட மசோதாவை எதிர்த்து ராஜிநாமாச் செய்தார்.

1895 ஆகஸ்ட் 19ம் திகதி உரும்பிராயில் பிறந்த திரு சுந்தரலிங்கம், யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவராவார் தனி நாட்டுக்கோரிக்கையை முன் வைத்து தேர்தலில் போட்டியிட்ட இவர், காலிமுகத்திடல் சத்தியாக்கிரகத்திலும் முக்கிய பங்கு வகித்தவர். இவரது இறுதிச் சடங்குகள் பற்றிய விபரம் பின்னா அறிவிக்கப்படும்.

### தமிழ்த் தலைவர்களுள்

— 1 ஆம் பக்கத் தொடர்

பொறிக்க வரலாற்று நாயகர் அஞ்சாமை, வீரம் ஆகிய குண இயல்புகளுக்கு உதாரண புருஷராகத் திகழ்ந்தவர் பெரியார் சுந்தர். அவரது பலதரப்பட்ட சேவையினுல் தமிழர் மட்டுமல்லாது, சகல மக்களுமே பெரும் பயன் பெற்ருர்கள் இந்நாட்டுத் தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆள வேண்டும் என்ற இலட்சியக் கீதத்தை முதலில் இசைத்த மூத்த தலைவர் என்றும் இச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

''அவர் தமிழர் வரலாற்றில் நிறைவு செய்த இடத்தை இனி எவராலும் நிரப்ப முடியாது இன்றைய சூழ்நிலையில் அவரது மறைவு மிகவும் துரதிர்ஷ்டவசமானது ஒற்றுமை தன்மானம் ஆகியவற்றுக்காக தன் வாழ்நாளை எல்லாம் செலவிட்ட பெரியாருக்கு நாம் செலுத்தக்கூடிய புனித அஞ்சலி அவரது வாழ்வின் இலட்சியங்களுக்காக உழைப்பதும் வாழ்வதுமேயாகும்'' என்றும் திரு ஆலாலசுந்தரம் குறிப்பிட்டுள்ளார்.

### தமிழினத்தின் ...

— 1-ம் பக்கத் தொடர்

அப்பிரேரணையை வழிமொழிந்தது அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்.

பாராளு மன்றத்திலும் வெளியேயும் அவர் எந்தவொரு பிரச்சினையிலும் போராடத் தவறவில்லை, இந்தக் குணநயங்களுக்காக அவரை அடங்காத் தமிழன் என்று தமிழ் மக்கள் அன்புடன் அழைத்தார்கள் அக்குணம் சத்திற்காக அவரை எல்லோரும் மதித்தார்கள் அவர் கைக்கொண்ட தனித்துவம் அவரின் இன்னொரு முத்திரையம். அவருக்கு தமிழ் மக்கள் செய்யக்கூடிய ஒரேயொரு அஞ்சலி தமிழ் இனத்தின் சுதந்திரத்திற்காக உழைப்பதுதான்'' என்றும் திரு குமார் பொன்னம்பலம் தமது செய்தியில் தெரிவித்துள்ளார்

### வட. இந்து மகளிர் கல்லூரியில்

## தொலைக்காட்சிப் பெட்டியும் பல பொருட்களும் கொள்ளை

(புலோலி)

வட. இந்து மகளிர் கல்லூரியில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டி, மின் இரட்டிப்பு இயந்திரம், தமிழ் தட்டச்சு இயந்திரம் ஆங்கில தட்டச்சு இயந்திரம் ஆகியன கொள்ளையடிக்கப்பட்டமையால் கல்லூரியின் மாணவிகளின் கல்வி நடவடிக்கைகள் சீர்குலைந்துள்ளமையால மாணவிகளின கல்வி நடவடிக்கைகளைக் கருத்திற் கொண்டு கொள்ளையடிக்கப்பட்ட இயந்திரங்களைத் திருப்பி ஒப்படைக்குமாறு கல்லூரி அதிபர் திருமதி சுப்பிரமணியம் கேட்டுக் கொண்டிருக்கிருர்.

கடந்த 6ம திகதி இரவு இக்கல்லூரியில இருந்த காவலாளியை துப்பாக்கி முனையில் பயமுறுத்தி ஆய்வுகூடத்தை உடைத்த இனந்தெரியாத கோஷ்டியொன்று ஆய்வுகூடத்திலிருந்த தொலைக்காட்சிப் பெட்டியைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

கல்வி அமைச்சினுல் நடாத்தப்பட்ட உயர்தர மாணவருக்கான பாட நெறியை இத் தொலைக்காட்சிமூலம் மாணவர்கள அவதானித்துப் பெரும் பயன் பெறுவந்தனர். இத் தொலைக்காட்சிப்பெட்டி கொள்ளையிடப்பட்டதால் மாணவர்கள தொலைக்காட்சிப் பாடநெறியை அவதானிக்க முடியாமல் அல்லலுறுகின்றனர்.

இதற்குமுன்னர் இக்கல்லூரியிலிருந்து இனந்தெரியாத கோஷ்டியினுல் காவலாளி துப்பாக்கி முனையில் பயமுறுத்தப்பட்டு இங்கிருந்த மின இரட்டிப்பு இயந்திரம், தமிழ் தட்டச்சு இயந்திரம், ஆங்கில தட்டச்சு இயந்திரம ஆகியனவும் கொள்ளையடிக்கப்பட்டன

## 11 மாநிலத்தில் 26,500 பேர்

அடுத்த மாதம் நடைபெறவுள்ள 11 மாநிலங்களுக்கும் ஒரு யூனியன் பிரதேசத்துக்குமான சட்டப்பேரவைத் தேர்தல்களில் மொத்தம 26 500 வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள். கர்நாடக மாநிலத்திலுள்ள பெல்லாங் தொகுதியில 301 வேட்பாளர்கள் போட்டியிடுவது இந்தியத் தேர்தல் வரலாற்றில இதுவரை காணப்படாத ஒரு அம்சமாகும்,

### மட்டுநகரில்....

—1ம் பக்கத் தொடர்

ருந்ததாக ராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது, 'ரெலோ, இயக்கம் இதற்கு உரிமை கோரியுள்ளதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

செங்கலடி பாலத்தடியில் மற்றொரு இளைஞரின் சடலம் சூட்டுக்காயத்துடன் கிடக்கக் காணப்பட்டது,

## கடத்தப்பட்ட இரண்டு பஸ்கள் பரு.துறையில் நின்றன

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து சில இளைஞர்களால் நேற்று நண்பகல் கடத்தப்பட்ட இரண்டு பஸ்கள் பிற்பகலின்போது பருத்தித்துறை டிப்போவுக்கு அண்மையில் கைவிடப்பட்டிருந்தன.

## தேடுதலில் கிடைத்தவை

வடபகுதியில் பாதுகாப்புப் படைகள் கடந்த சனிக்கிழமை மேற்கொண்ட தேடுதல் வேட்டை ஒன்றின்போது இரண்டு தீவிரவாத சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டதுடன், பல பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக ராஜாங்க அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்படையினரால் பயன்படுத்தப்படும் ஒன்பது உயிர்ப் பாதுகாப்பு உடைகள், சுழியோடும்போது பயன்படுத்தப்படும் பிராணவாயு சிலிண்டர், போட் எட்டுத் தொலைபேசிகள், 15 ஜெலிக்னைட் குச்சிகள், போட்டோஸ்ரட் இயந்திரம், ரைபரைட்டர், ஏழு மின்சார விசிறிகள், எட்டுத் துணிப் பொட்டலங்கள் ஆகியனவே கைப்பற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### குருநகர் வீதிகளில்.....

— 1-ம் பக்கத் தொடர்

எதுவும் நடைபெறலாமென்ற பீதியுடன் மக்கள் காணப்பட்டனர் காரைநகர் பகுதியில் சிறு அசம்பாவிதங்கள் நடைபெற்றதாக கூறப்படுகின்றது. தெல்லிப்பளை ஆஸ்பத்திரிவீதியிலுள்ள பிரதான மதகும் தகர்க்கப்பட்டிருந்தது.


## நிருபர்கள் தேவை

ஈழமுரசு காங்கேசன்துறை, சாவகச்சேரி, முல்லைத்தீவு பகுதி நிருபர்கள் இம்மாத இறுதியில் வெளிநாடு செல்வதால் மார்ச் முதலாம் திகதி முதல் இப்பகுதிகளில் நிருபர்களாகப் பணியாற்ற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஊர்காவற்றுறை, மாதகல், அளவெட்டி வல்வெட்டித்துறை, பளை, பரந்தன், பூநகரி ஆகிய இடங்களுக்கும் உடனடியாக நிருபர்கள் தேவை.

அந்தந்தப் பகுதிகளில் நிரந்தரமாகக் குடியிருப்பவர்களே விண்ணப்பிக்கலாம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நல்லறிவும் செய்தி சேகரிப்பதில் ஆர்வமும் உடையவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும். என்வலப்பின் இடபக்க மேல் மூலையில் 'நிருபர் பதவி' என்று குறிப்பிடவும்.

சகல விண்ணப்பங்களும் அந்தரங்கமாக வைத்திருக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி 25-2-1985

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-

ஆசிரியர்,
ஈழமுரசு,
37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்


ஈழமுரசு சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால், 37,கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 12-5-85 செவ்வாய்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336